நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகத்தில் கனமழை: 1.4 லட்சம் ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கின**

First Published : 30 Nov 2010 04:35:51 AM IST



சென்னை, நவ. 29: தமிழகத்தில் பெய்து வரும் கனமழையால் 1.5 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

வீடுகள் இடிந்தது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது போன்ற சம்பவங்களால் மழைக்கு இதுவரை 103 பேர் பலியாகியுள்ளனர்.

தமிழகத்தின் தென் மாவட்டங்கள், கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. கடந்த சில நாள்களாக இந்த மழை தீவிரம் அடைந்துள்ளது. குறிப்பாக, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கனமழை கொட்டி வருகிறது.

÷மாவட்ட நிர்வாகங்கள் சார்பில், நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை முதல்வர் கருணாநிதி திங்கள்கிழமை ஆய்வு செய்தார்.

ஆய்வுப் பணி குறித்து, முதன்மைச் செயலாளரும், வருவாய் நிர்வாக ஆணையாளருமான சுந்தரதேவன் வெளியிட்ட தகவல்:

திருவள்ளூர், ராமநாதபுரம், ஈரோடு, மதுரை, கடலூர் மாவட்டங்களில் மழையினால் பாதிக்கப்பட்ட 301 குடும்பங்கள் மற்றும் 6 ஆயிரத்து 787 பேர் உடனடியாக பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நாள்தோறும் ஏறத்தாழ 10 ஆயிரம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விரைவுபடுத்த வேண்டும்: மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை மேலும் விரைவுபடுத்த வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், தங்குமிடம் ஆகிய ஏற்பாடுகளை உடனடியாக செய்திட வேண்டும் என்றும் முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டார். நிவாரண உதவிகளை தாமதம் இல்லாமல் உரியவர்களுக்கு வழங்கிடவும் அதிகாரிகளை முதல்வர் அறிவுறுத்தினார்.

மழையின் காரணமாக பகுதியாகவும், முழுமையாகவும் 1,254 குடிசைகள் சேதம் அடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட குடிசை வீட்டுக்கு தலா ரூ. 2 ஆயிரம் வீதம் ரூ. 25 லட்சத்து 8 ஆயிரம் வழங்கப்படும். 335 கால்நடைகள் இறந்துள்ளன. ÷ ÷மழை காரணமாக உயிரிழந்த 103 பேரின் குடும்பங்களுக்கு உடனடி நிவாரண உதவியாக மாவட்ட ஆட்சியர் அளவில், பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1 லட்சமும், முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து மேலும் ரூ. 1 லட்சம் வழங்கிடவும் அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

பயிர் சேதம்: மழையினால் மதுரை, விழுப்புரம், தருமபுரி, தஞ்சாவூர், ஈரோடு, திருச்சி, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஏறத்தாழ ஒரு லட்சத்து 42 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மழை நீர் முழுமையாக வடிந்தவுடன் பயிர்ச் சேதம் குறித்து கணக்கிடப்பட்டு அரசின் நிவாரண உதவிகள் உடனடியாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் தெரிவித்துள்ளதாக செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்டங்களில் எவ்வளவு?** தஞ்சை, கடலூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் அதிகளவு பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தஞ்சாவூரில் 5 ஆயிரத்து 903 ஹெக்டேரும், கடலூரில் 16 ஆயிரத்து 411 ஹெக்டேரும், நாகப்பட்டினத்தில் 37 ஆயிரத்து 890 ஹெக்டேரும், மதுரையில் 709 ஹெக்டேரும், விழுப்புரத்தில் 702 ஹெக்டேர் அளவுக்கும் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**காய்கறி விலை உயர்ந்தது**

First Published : 30 Nov 2010 03:23:52 AM IST



திருவள்ளூர், நவ. 29: மக்களின் அன்றாட வாழ்க்கையில் அத்தியாவசிய தேவையான காய்கறிகளின் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதால் குடும்பச் செலவை கட்டுப்படுத்த முடியாமல் நடுத்தர குடும்பத்தினர் திணறி வருகின்றனர்.

÷திங்கள்கிழமை நிலவரப்படி திருவள்ளூர் மார்க்கெட்டில், ஒரு கிலோ வெங்காயம் ரூ. 28 முதல் 32, தக்காளி அதன் தரத்திற்கேற்ப ரூ. 16 முதல் 20 வரை விற்கப்படுகிறது. கத்தரிக்காய் அதன் தரத்திற்கேற்ப ஒரு கிலோ ரூ. 32 முதல் 36, கருணைக்கிழங்கு ரூ. 32, இஞ்சி ரூ. 70, உருளை ரூ. 36, பீன்ஸ் ரூ. 45, வெண்டைக்காய் ரூ. 28, கேரட் 23 என அனைத்து காய்களும் கடும் விலையேற்றத்தில் உள்ளன.÷தேங்காய் குறைந்த பட்சம் ரூ. 12க்கு விற்கப்படுகிறது. எலுமிச்சை பழம் ஒன்று ரூ. 2 முதல் ரூ. 3 வரை விற்கப்படுகிறது.

÷கடைகளில் காய்கள் வாங்கினால் இலவசமாக தரப்படும் கொத்தமல்லி, கறிவேப்பிலை கூட விலையேற்றத்தின் காரணமாக, குறைந்தது ரூ. 5 கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

÷ஒரு பக்கம் அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய் போன்ற பொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் அதிருப்தி அடைந்துள்ள நடுத்தர குடும்பத்தினர் காய்கறிகளின் விலையேற்றத்தால் திணறி வருகின்றனர்.

÷போதாக்குறைக்கு ஒரு மாதமாக "ஜல்' புயல் முதல் வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக காய்கள் வரத்து குறைந்துள்ளதால் காய்கறி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன என வியாபாரிகள் கூறுகின்றனர்.

÷ஆனால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் திங்கள்கிழமை நிலவரப்படி தக்காளி 12, வெண்டை 20, வெங்காயம் 24, கருணை 24, கத்தரிக்காய் 30, உருளை 18,

முட்டைக்கோஸ் 15, கேரட் 20 உள்ளிட்ட அனைத்து காய்களின் விலைகளும் ஓரளவு குறைந்த விலைப் பட்டியல் வைக்கப்பட்டுள்ளது.

÷இதற்கு காரணம் எந்தவித இடைத்தரகர்களும் இல்லாமல் விவசாயிகள் தங்களது விளைப் பொருள்களை நேரடியாக இங்கு வந்து விற்கப்படுவதால் இந்த விலை சாத்தியமாகிறது.

÷ஆனால் திருவள்ளூர் உழவர் சந்தையில் பெயரளவில் மட்டும் சில கடைகளில் குறிப்பிட்ட காய்கள் மட்டும் விற்கப்படுகிறதே தவிர அனைத்து காய்களும் முறையாக விற்கப்படுவதில்லை.

÷திருவள்ளூர் உழவர் சந்தையை முழுக்க முழுக்க பூ வியாபாரிகள் மட்டுமே ஆக்கிரமித்துள்ளனர்.

÷காய்கறி வரத்து குறைவாக உள்ளது. விவசாயிகள் தங்களது விளைப்பொருளை உழவர் சந்தையில் விற்காமல் மார்க்கெட்டுக்கு எடுத்துச் சென்று இடைத்தரகர்களிடம் வந்த விலைக்கு விற்றுச் சென்றுவிடுதால் இந்த நிலை ஏற்படுகிறது.

÷இது போன்ற நிலையைப் போக்க தமிழக அரசு உழவர் சந்தை அடையாள அட்டையை வைத்துக் கொண்டு அதை முறையாக பயன்படுத்தாமல் இடைத்தரகர்களிடம் பொருள்களை விற்பதை கண்காணித்து அதுபோன்ற விவசாயிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகளை தடை செய்தல் போன்ற அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் மட்டுமே உழவர் சந்தைகளின் முழுமையான பலனை பொதுமக்கள் அடைவர் என்பது சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

**தூத்துக்குடியில் காய்கனி விலை கடும் உயர்வு**

First Published : 29 Nov 2010 02:30:24 PM IST

தூத்துக்குடி, நவ. 28: தமிழகத்தில் பெய்துவரும் தொடர் மழை காரணமாக தூத்துக்குடியில் காய்கனி விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் கடந்த 10 நாள்களுக்கும் மேலாக தொடர் மழை பெய்து வருகிறது.

இதனால், காய்கனி விளைச்சல் பாதிக்கப்பட்டு, விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த சில நாள்களாக படிப்படியாக உயரத் தொடங்கிய காய்கனி விலை தற்போது உச்சத்தை எட்டியுள்ளது.

வழக்கமாக கார்த்திகை மாதம் பிறந்துவிட்டால், சபரிமலை சீசன் தொடங்கிவிடும். இதனால், அசைவ உணவு பொருள்களின் தேவை குறைந்து, சைவ உணவுப் பொருள்களின் தேவை அதிகரிக்கும்.

மேலும், இந்த மாதத்தில் விழாக்கள், திருமணங்கள் அதிகம் நடைபெறுவதால் காய்கனிகளின் தேவை அதிகமாகவே இருக்கும்.

ஆனால், இந்த ஆண்டு இவைகளுடன் சேர்ந்து கனமழையும் தொடர்ந்து பெய்து வருவதால், காய்கனி விளைச்சலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், எப்போதும் இல்லாத அளவுக்கு காய்கனி விலை உயர்ந்துள்ளது.

தூத்துக்குடி வ.உ.சி. மொத்த காய்கனி சந்தையில் கடந்த 10 நாள்களுக்கு முன்னர் ரூ. 12-க்கு விற்பனை செய்யப்பட்ட கத்திரிக்காய் ஞாயிற்றுக்கிழமை கிலோ ரூ. 25-க்கு விற்பனை செய்யப்பட்டது. ரூ. 15-க்கு விற்கப்பட்ட அவரைக் காய் ரூ. 40-க்கும், கிலோ ரூ. 18-க்கு விற்பனை செய்யப்பட்ட மிளகாய் ரூ. 60-க்கும், ரூ. 20-க்கு விற்கப்பட்ட கேரட் ரூ. 35-க்கும், ரூ. 15-க்கு விற்கப்பட்ட பீட்ரூட் ரூ. 20-க்கும், ரூ. 20-க்கு விற்கப்பட்ட பீன்ஸ் ரூ. 35-க்கும் விற்பனை செய்யப்பட்டன.

வெண்டைக்காய் கிலோ ரூ. 10-ல் இருந்து ரூ. 15 ஆகவும், கொத்தவரை ரூ. 12-ல் இருந்து ரூ. 18 ஆகவும், பீர்க்கங்காய் ரூ. 14-ல் இருந்து ரூ. 30 ஆகவும், முள்ளங்கி விலை ரூ. 15-ல் இருந்து ரூ. 20 ஆகவும், உருளைக் கிழங்கு ரூ. 20-ல் இருந்து ரூ. 25 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

இதேபோல முட்டைக்கோஸ், காலிபிளவர், சவ்சவ், பச்சைப் பட்டாணி, பட்டர் பீன்ஸ், நூல்கோல், டர்னிப், இஞ்சி, முருங்கைக்காய், வெள்ளரிக்காய், தடியங்காய், பூசணிக்காய், சேனைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, சீனிக் கிழங்கு போன்றவைகளின் விலையும் 10 சதவிகிதம் முதல் 20 சதவிகிதம் வரை உயர்ந்துள்ளது.

தூத்துக்குடி காய்கனி சந்தைக்கு பெரும்பாலான காய்கனிகள் மேட்டுப்பாளையம் பகுதியில் இருந்து வருகிறது.

அங்கு தொடர்ந்து மழை பெய்து வருவதால் காய்கனி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், காய்கனி வரத்து குறைந்துள்ளது. எனவே இந்த விலை உயர்வு என்றனர் வியாபாரிகள்.

வெங்காயம் விலை கடும் உயர்வு:

தூத்துக்குடியில் வெங்காயம் மற்றும் பல்லாரி விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த 10 நாள்களுக்கு முன்பு ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ. 30-க்கு விற்பனை செய்யப்பட்டது. இது ஞாயிற்றுக்கிழமை
ரூ. 45- ஆக உயர்ந்துள்ளது.

அதுபோல பல்லாரி விலை கிலோ ரூ. 25-ல் இருந்து ரூ. 35 ஆக உயர்ந்துள்ளது. இதேபோன்று பூண்டு விலையும் மிக கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு இதே காலத்தில் கிலோ ரூ. 150-க்கு விற்பனை செய்யப்பட்ட மலைப் பூண்டு தற்போது ரூ. 260 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதேபோன்று ரூ. 80-க்கு விற்பனை செய்யப்பட்ட சாதாரண ரக பூண்டு தற்போது ரூ. 150 வரை விற்கப்படுகிறது.

மேலும், தூத்துக்குடியில் தேங்காய் விலையும் மிக கடுமையாக உயர்ந்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரூ. 3-க்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய், தற்போது ரூ. 7-க்கு விற்பனையாகிறது. பெரிய தேங்காய் ரூ. 20 வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல கனமழை தொடர்ந்து பெய்தால் காய்கனிகளின் விலை மேலும் உயருவதற்கு வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**செம்மை நெல் சாகுபடி: பாய் நாற்றங்கால் செயல் விளக்கம்**

First Published : 29 Nov 2010 11:13:47 AM IST

திண்டிவனம், நவ. 28: திண்டிவனத்தை அடுத்த மேல்பாக்கம் கிராமத்தில் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி (இராஜராஜன் 1000 சாகுபடி) மற்றும் பாய் நாற்றாங்கால் செயல்விளக்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

பேராசிரியர் மற்றும் தலைவர் ராமமூர்த்தி, திட்ட விஞ்ஞானி முனைவர் சீனி.அன்புமணி ஆகியோர் செயல்விளக்கம் வழங்கினர்.

அவர்கள் கூறியது: பாய் நாற்றாங்கால் மூலம் விதைப்பதற்கு முன்பு சூடோமோனாஸ் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்வது அவசியம். இவ்வாறு செய்வதால் விதை மூலம் பரவும் நோய்களில் இருந்து பாதுகாக்கலாம்.

பாய் நாற்றாங்கால் மூலம் ஏக்கருக்கு ஒரு சென்ட் இடத்தை உழவு செய்து சமன்படுத்தி அதன்மேல் பிளாஸ்டிக் பாயை பரப்பி ஆங்காங்கு ஓட்டை போட வேண்டும். பின்பு 4 செ.மீ. உயர விதைப்புச்சட்டம் கொண்டு வயலில் உள்ள கட்டியான சேற்றை நிரப்பி சமன்படுத்துதல் அவசியம். 3 கிலோ விதையை சமச்சீராக கையால் தூவ வேண்டும். விதைத்த பின் காய்ந்த கைக்கோல் கொண்டு மூட வேண்டும். தினமும் காலை, மாலை வேளைகளில் பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். பின்பு 4-ம் நாள் வைக்கோலை அகற்றி நீர்ப்பாசனம் செய்து வர வேண்டும்.

விதைத்த 12-ம் நாள் 30 லிட்டர் நீருடன் 150 கிராம் யூரியாவை கலந்து தெளிப்பதன் மூலம் நாற்றின் உயரத்தை அதிகரிக்க முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் விவசாயிகள் குறைந்த இடத்தில் மிகக் குறைந்த செலவில் வீரியமான இளம் நாற்றை 15 நாள்களுக்குள் பெற முடியும் என்றனர்.

ஏரிப்பாசன சங்கத் தலைவர் ராமநாதன் மற்றும் 20-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். ஒலக்கூர் வட்டார ஆராய்ச்சியாளர் பாரதி மற்றும் திரிபுரசுந்தரி நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்தனர்.

**ஆவின் பால் கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை**

First Published : 29 Nov 2010 02:29:26 PM IST

திருநெல்வேலி,நவ.28: ஆவின் பால் கூடுதல் விலைக்கு விற்றால் முகவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருநெல்வேலி ஆவின் பொது மேலாளர் சேகர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் செயல்படும் ஆவின் முகவர்களில் சிலர், அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு பாலை விற்பனை செய்வதாக புகார்கள் அதிகமாக வருகின்றன.

முகவர்கள் அரசு நிர்ணயித்த விலையில்தான் பாலை விற்பனை செய்ய வேண்டும். அதைத் தவிர்த்து கூடுதல் விலைக்கு பாலை விற்றால், சம்பந்தப்பட்ட முகவர் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதில் ஆவின் பால் நுகர்வோர்கள், தங்களது பகுதியில் யாரேனும் ஆவின் பாலை கூடுதல் விலைக்கு விற்றால் எங்களுக்கு தகவல் தெரிவிக்கலாம்.

எங்களை 0462 - 2552004, 2552636 ஆகிய தொலைபேசி எண்களிலும், 94422 04255 என்ற செல்போன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் சேகர்.

**பயிர்ச் சேதங்களுக்கு நிவாரணம் கிடைக்குமா?**

ஆர். முருகன்

First Published : 29 Nov 2010 11:51:06 AM IST

தருமபுரி, நவ. 28: கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக இப்படியொரு மழையை தருமபுரி விவசாயிகள் பார்த்ததில்லை என்ற மகிழ்ச்சிக்கு மாறாக, பயிர்ச் சேதம் காரணமாக விவசாயிகளின் கண்ணீர் மழைநீரோடு கரைந்திருப்பதே வேதனையாக உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த 10 நாள்களாக ஓயாது பெய்த மழையால் பெரும்பான்மையான விளைநிலங்களில் இன்னும் தண்ணீர் வடிந்தபாடில்லை. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 895.66 மி.மீ. வடகிழக்குப் பருவமழையின்போது சராசரியாக 389 மி.மீ. மழை பெய்யும். தற்போது, 378 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. ஆனால், இந்த மழையானது பெரும்பாலான விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

பயிர்ச் சேதம்: மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு, அரூர், மொரப்பூர், பென்னாகரம், தருமபுரி, காரிமங்கலம், நல்லாம்பள்ளி, பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 8 ஒன்றியங்களிலும் நெல் பயிரிட்ட விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது. மழைக்கு முன்பாகவே சுமார் 600 ஏக்கர் பரப்பில் புகையான் நோய் தாக்கியிருந்தது. தற்போது, மழையால் நெல் மணிகள் முழுவதும்

வீணாகி விட்டன. பெரும்பாலான பகுதிகளில் அறுவடை செய்த நெல்லை கதிரடிக்க முடியாமல் அப்படியே வைத்துள்ளனர். மழைநீர் தேங்கியிருந்த வயல்களில் பயிரையே உரமாக்கும் வகையில் மறுஉழவு செய்துவிட்டனர். இதேபோல், 500-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பருத்தி வீணாகிவிட்டது. நல்ல விலை கிடைத்து வந்ததால் மாவட்டத்தில் பரவலாக மஞ்சள் பயிரிடப்பட்டது. ஆனால், தொடர்மழையால் வேர்அழுகல் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 ஆயிரம் ஏக்கரில் மானாவாரியாக பயிரிடப்பட்டிருந்த அவரை, துவரை பயிர்களில் பூக்கள் அனைத்தும் கொட்டிவிட்டன. மழையில் நனைந்த பயிர்களில் மீண்டும் பூக்கள் பூத்தாலும் காய்கள் காய்க்க வாய்ப்பு இல்லை என்கின்றனர் விவசாயிகள். இதேபோல், சோளம், ராகி, சாமை, வெற்றிலை, தக்காளி, வாழை என பல்வேறு பயிர்களும் ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளது. எச்சனஹள்ளி ஊராட்சி மற்றும் சுற்றுப் பகுதிகளில் மட்டும் 100 ஏக்கருக்கும் அதிகமாக நெல், பருத்தி, மஞ்சள் பயிர்கள் வீணாகிவிட்டன.

தேவை பேரிடர் நிவாரணம்: இது தொடர்பாக, தமிழக விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் கே.எம். ராமக்கவுண்டர் கூறியது: தொடர் மழைக்கு தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக பயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, நெல், பருத்தி, மஞ்சள் பயிர் மட்டும் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல், இதர பயிர்களும் தலா 100 ஏக்கருக்கும் அதிகமான நிலையில் சேதமடைந்துள்ளன. பயிர்ச் சேதங்கள் குறித்து முழுமையாக கணக்கெடுப்பு நடத்த வேண்டும். காப்பீடு செய்திருந்தால் இழப்பீடு பெற்றிருக்கலாம் என்கின்றனர் அதிகாரிகள். கரும்புக்கு காப்பீடு செய்திருந்தும் கடந்தாண்டு வறட்சியால் கரும்பு விளைச்சல் பாதிக்கப்பட்டபோது இழப்பீடு பெறமுடியவில்லை. எனவே, காப்பீடு மீது விவசாயிகளுக்கு நம்பிக்கை இல்லை. தற்போதைய மழை பாதிப்பை பேரிடராகக் கருதி உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

கணக்கெடுப்பு பணி தீவிரம்: மழையால் ஏற்பட்டுள்ள பயிர்ச் சேதம், கால்நடைகள் மற்றும் வீடுகள் உள்ளிட்ட அனைத்துவகையான சேதங்கள் குறித்தும் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைப் பராமரிப்புத் தறை, வருவாய்த்துறையினர் கணக்கெடுத்து வருகின்றனர். வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சி. துரைசாமி கூறுகையில், தற்போதைய சூழலில் 212 ஏக்கரில் நெல், 192 ஏக்கரில் பருத்தி, 75 ஏக்கரில் பாசிப்பயிறு ஆகியவற்றின் சேதம் கணக்கிடப்பட்டுள்ளது. இதர பகுதிகளிலும் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. சேதம் தொடர்பான பட்டியல் ஆட்சியர் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு நிவாரணம் வழங்க பரிந்துரைக்கப்படும் என்றார்.

இதேபோல், தோட்டக்கலைத்துறை மூலமும் மஞ்சள் வாழை, வெற்றிலை உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களின் சேதம் கணக்கிடப்பட்டு வருகிறது என்றார் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் சதாசிவம். கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்களும் கணக்கெடுப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தினமலர்

**மரவள்ளி, கேழ்வரகு பயிர்கள் நாசம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,02:34 IST

ஈரோடு: பலத்த மழையால் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக, அப்பகுதி மக்கள் அழுகிய பயிர்களுடன் ஈரோடு கலெக்டர் அலுவலகம் வந்தனர். பர்கூர், கடம்பூர் மலைப்பகுதியில் ஏராளமான குக்கிராமங்கள் உள்ளன. இங்கு ஆயிரக்கணக்கான மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். படிப்பறிவில்லாத இப்பகுதி மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளனர். மற்ற தொழில்களில் அவர்களுக்கு நாட்டமில்லை. இவர்கள் கேழ்வரகு, மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். அதில் கிடைக்கும் சொற்ப தொகையை வைத்து குடும்பத்தை நடத்தி வருகின்றனர். ஈரோடு மாவட்டத்தில், கடம்பூர், பர்கூர் பகுதியில் பெய்த தொடர் மழையால், இவர்களது வயல்களில் தண்ணீர் தேங்கி, பயிர்கள் முழுவதும் நாசமடைந்துள்ளது. அழுகிய மரவள்ளிக்கிழங்கு, விதை முளைத்த கேழ்வரகு பயிர்களுடன், நேற்று மலைவாழ் விவசாயிகள் கலெக்டர் அலுவலகம் வந்தனர். அவர்கள் கூறியதாவது: பர்கூர், தாமரைக்கரை, கடம்பூர், தேவர்மலை, சுண்டப்பூர், பொன்னகரை, எப்பத்துபாளையம் உட்பட பல்வேறு மலைப்பகுதியில் உள்ள மக்கள், கேழ்வரகு, மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர்.

இப்பயிர்களே எங்களுக்கு ஜீவன். வேறு தொழில் எங்களுக்கு தெரியாது என்பதால் இந்த இரண்டு பயிர்களை மட்டுமே நம்பியுள்ளோம். சமீபத்தில் பெய்த மழையால், அறுவடைக்கு தயாராக இருந்த கேழ்வரகு பயிரில், விதை மேற்பகுதி முளைத்து விட்டது. இதை என்ன செய்வது எனத் தெரியவில்லை. மரவள்ளிக்கிழங்கு மழை வெள்ளத்தால் அழுகி விட்டது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உணவுக்கே திண்டாட வேண்டிய

நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**குமரியில் தொடர் மழை ரப்பர் உற்பத்தி கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,00:38 IST

திற்பரப்பு : குமரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.
குமரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இன்னும் மழையின் தாக்கம் குறையவில்லை. தொடர்ந்து மழை பெய்து வருவதால் மாவட்டத்தின் முக்கிய தொழிலான ரப்பர் பால் வடிக்கும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோல் செங்கல் தொழில் செய்யும் பகுதிகளில் மழை தண்ணீர் தேங்கி நிற்பதால் செங்கல் உலர வைக்க முடியாமல் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ரப்பர் பால் வடிக்கும் தொழில் செய்து வருகின்றனர். தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக வேலை செய்ய முடியாமல் தொழிலாளர்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

மேலும் கடந்த சில மாதங்களாக சீரான முறையில் தொழில் நடக்கவில்லை. தொடர் மழையால் ரப்பர் பால் வடிக்கும் தொழில் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. இம்மாதம் முடியும் தருவாயில் இதுவரை ஏழு நாட்கள் மட்டுமே தொழில் நடந்துள்ளது. ரப்பர் பால் வடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர் வாழ்க்கை இந்த ஊதியத்தை நம்பியே உள்ளது.
தொழிலாளர்கள் பாதிப்பு ஒருபுறம் இருக்க, ரப்பர் விவசாயிகளும் வருவாய் இன்றி தவித்து வருகின்றனர். சிறுவிவசாயிகள் ரப்பர் பால் மூலம் கிடைக்கும் வருவாயை நம்பியே உள்ளனர். இவர்களும் தொடர் மழையால் வருவாய் இன்றி தவிக்கின்றனர். ரப்பருக்கு அதிக விலை விற்கும் போது ரப்பர் உற்பத்தி செய்ய முடியாமல் போவது விவசாயிகள் மத்தியில் கூடுதல் கவலையை உருவாக்கியுள் ளது. மழை காரணமாக ரப்பர் உற்பத்தி செய்ய முடியாமல் தொழிலாளர்கள், ரப்பர் விவசாயிகள் மட்டுமின்றி ரப்பர் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**நெல் விதைக்கும் கருவி செயல் விளக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,00:42 IST

தூத்துக்குடி, நவ.30- திருவரங்கம்பட்டி கிராமத்தில் நெல் விதைக்கும் கருவி பற்றிய செயல்விளக்கம் நடந்தது. தூத்துக்குடி வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் மூலமாக கருங்குளம் பஞ்., யூனியனின் கால்வாய் பஞ்.,ல் உள்ள

திருவரங்கம்பட்டி கிராமத்தில், விவசாயிகள் முன்னிலையில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நெல் விதைக்கும் கருவி பற்றிய செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், வேளாண்மையில் இயந்திரமயமாக்கலின் முக்கியத்துவம் மற்றும் பலதரப்பட்ட வேளாண் கருவிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறை மூலம் வழங்கப்படும் மானியங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு உதவி பொறியாளர்கள் முருகானந்தம் மற்றும் முருகன் ஆகியோர் எடுத்து கூறினர். திருவரங்கம்பட்டி மற்றும் கால்வாய் பகுதிகளில் இருந்து விவசாயிகள் கல ந்து கொண்டனர். பின்னர் தூத்துக்குடி உதவி செயற்பொறியாளர், அலுவலக பொறியாளர்கள் விவசாயிகளுக்கு நெல் விதைக்கும் கருவியின் பயன்கள் பற்றி விளக்கி கூறினர்.

**தொடர்கிறது பருவ மழை தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,00:19 IST

திருப்பூர்: கடந்த 10 நாட்களுக்கு மேலாக, வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்வதால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருப்பூர் மாவட்ட விவசாய பயிர்களில் தென்னை முதன்மையான இடத்தை பிடிக்கிறது. பரவலாக தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு விளைநிலத்திலும், குறைந்தது 10 மரமாவது இருக்கும். சில விவசாயிகள், தனது நிலம் முழுவதும், தென்னை மட்டும் பயிரிட்டுள்ளனர்.

இந்தாண்டு நல்ல மழை பெய்து வருகிறது. தொடர்மழை, தென்னை விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. கடந்த மூன்று மாதமாக, போதிய மழையின்றி, தென்னையில் காப்பு குறைந்துள்ளது. இதனால், தேங்காய் மற்றும் கொப்பரை விலை உயர்ந்துள்ளது. தேங்காய் 10 ரூபாய் வரையும், கொப்பரை கிலோ 50 ரூபாயையும் கடந்துள்ளது. கடந்த 10 நாட்களில் 120 மி.மீ., அளவுக்கு மழைப்பொழிவு கிடைத்துள்ளது.

தொடர் மழை கிடைப்பது, தென்னை பயிருக்கு சிறந்தது. தண்ணீர் பற்றாக்குறையில் இருந்த மரங்கள், செழிப்புடன் காய்க்க துவங்கியுள்ளன. முத்தணம்பாளையம், மங்கலம், நெருப்பெரிச்சல் என, திருப்பூர் சுற்றுப்பகுதி மற்றும் பொங்கலூர், அவிநாசி வட்டாரம் என தென்னை விவசாயிகள் நல்ல பயனடைந்துள்ளனர். அடுத்த ஓராண்டுக்கு தண்ணீர் பிரச்னை ஏற்படாது. வரும் நாட்களில் 50 சதவீதம் காய்ப்பு அதிகரிக்கும் என தெரிவித்தனர்.

**மலட்டாறில் தண்ணீர்: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 30,2010,00:13 IST

நெல்லிக்குப்பம் : மலட்டாறு தூர் வாரியதால் தண்ணீர் வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திருக்கோவிலூர் பெண்ணையாற்றில் இருந்து உபரி நீர் மலட்டாறில் திருப்பி விடப்படும். விழுப்புரம், கடலூர் மாவட்டங்கள் வழியாக செல்லும் இந்த ஆறு பண்ருட்டி அடுத்த கட்டமுத்து பாளையம் வரை செல்கிறது. கடந்த 1972ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது மலட்டாறு மணல் மேடானது. இதனால் மலட்டாறுக்கு நீர் வரத்து நின்றது. ஜீவநதி மலட்டாறு நிலத்தடி நீர் மேம்பாட்டு எழுச்சிக் கூடல் தலைவர் தட்சணாமூர்த்தி, இயக்குனர் மணிவண்ணன் ஆகியோர் இ.ஐ.டி., சர்க்கரை ஆலை நிர்வாகத்துடன் இணைந்து தூர் வார முயற்சி மேற்கொண்டனர்.

இதற்கிடையே கடந்த 2008ம் ஆண்டு எம்.எல்.ஏ., சபாராஜேந்திரன் முயற்சியால் அரசூர் முதல் கட்டமுத்துப்பாளையம் வரை 17 கி.மீ., தூரம் தூர் வாரப்பட்டது. கடந்த ஆண்டு மழையின் போது ஆற்றில் நீர்வரத்து துவங்கியது. தற்போது பெண்ணையாற்று வெள்ளத்தால் மலட்டாறின் தண்ணீர் ஓடுகிறது. இதனால் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதால் 66 கிராம மக்களும் விவசாயிகளும் பயனடைந்துள்ளனர்.

மேலும் மலட்டாற்றில் 50 அடிக்கும்மேல் மணல் இருப்பதால் தூர் வாரிய மண் சரிகிறது. விவசாயிகள் நலன் கருதி ஆற்றின் இருபுறமும் தடுப்புசுவர் அமைக்க வேண்டும். அரசூரில் ஷட்டர் அமைப்பது, கரும்பூர், திருத்துறையூர், கட்டமுத்துப்பாளையம் பகுதிகளில் பாலம் கட்டும் பணியும் நிலுவையில் உள்ளது. இப்பணிகளையும் முடித்தால் 66 கிராம விவசாயிகள் நிரந்தரமாக பயன் பெறுவார்கள்.

**கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் ஏலம் ஒத்திவைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,03:30 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதியில் பெய்து வரும் தொடர்மழையால், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடக்க இருந்த மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடத்தப்படும். கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருவண்ணாமலை,

சின்னசேலம், நைனார்பாளையம் மற்றும் ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சளை கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்கின்றனர்.

தீபாவளி பண்டிகை மற்றும் தொடர் மழை காரணமாக, கடந்த 6ம் தேதி நடக்க இருந்த மஞ்சள் ஏலம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது. அடுத்து 13ம் தேதி நடந்த ஏலத்தில் மஞ்சள் குவிண்டால் 15 ஆயிரத்து 304 ரூபாய்க்கு விற்றது. 20ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில் 15 ஆயிரத்து 681 ரூபாய்க்கு விற்றது. கடந்த சில தினங்களாக ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால், நேற்று முன்தினம் இரவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் மண்டியில் நடக்க இருந்த மஞ்சள் ஏலத்துக்கு விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை கொண்டு வரவில்லை. அதனால், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் மண்டிகளில் நடக்க இருந்த மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

அதுகுறித்து ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அலுவலர் ஒருவர் கூறுகையில்,""நேற்று முன்தினம் இரவு நடக்க இருந்த மஞ்சள் ஏலம் தொடர் மழையால் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது வெளிமார்க்கெட்டில் மஞ்சள் 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. டிசம்பர் மாதம் மஞ்சள் கூடுதல் விலைக்கு விற்பனையாகும். அதனால் மஞ்சள் இருப்பு வைத்துள்ள  விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் சூழல் உள்ளது,'' என தெரிவித்தார்.

**காபி விளைச்சல் "ஜோர்'விவசாயிகள் உற்சாகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,23:39 IST

கோத்தகிரி:கோத்தகிரி பகுதிகளின் தேயிலைத் தோட்டங்களில் ஊடுபயிராக உள்ள காபி விவசாயத்தில் விளைச்சல் களைகட்டியுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தின் பெரும்பாலான நிலப்பரப்பில், தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. "தேயிலை நகரம்' என அழைக்கப்படும் கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில், தேயிலை விவசாய பரப்பரளவு அதிகமாக உள்ளது. மேலும், காபி விவசாயத்தை, ஊடுபயிராகவும் பயிரிட்டுள்ளனர். சோலூர்மட்டம், கீழ்கோத்தகிரி மற்றும் குஞ்சப்பணை பகுதிகளில், "ரொபஸ்டா' வகை, அரவேனு உட்பட இதரப் பகுதிகளில், "அராபிகா' வகை களைகட்டியுள்ளது.பசுந்தேயிலையின் விலை அவ்வப்போது மாறும் நிலையில், தேயிலைத் தோட்டங்களில் ஊடுபயிரான காபி விவசாயம் மூலம் கிடைக்கும் வருவாயை கொண்டு,

நிலையை சமாளித்து வருகின்றனர்.தற்போது, தயாராக உள்ள காபி பழங்களை அறுவடை செய்து, மார்க்கெட்டில் விற்பனை செய்ய, விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர்.

**கீரை சாகுபடியில் பூச்சி தாக்குதல் அதிகரிப்பு தடுப்பு முறைகளை கையாள ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 29,2010,03:17 IST

நாமக்கல்: "கீரையில் சாகுபடியில் தற்போது பூச்சியின் தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. அதை கட்டுப்படுத்த தடுப்புமுறைகளை கையாள வேண்டும்' என, நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் நடராஜன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கீரை வகைகளில் தண்டுக்கீரை, முளைக்கீரை, அரைக்கீரை என பல வகைகள் உள்ளன. அதன் பசுமையான இலைகளும், இளந்தண்டுகளும் பொரியலுக்கு உகந்தவை. கீரையில் சுண்ணாம்பு, இரும்பு, வைட்டமின் ஏ, சி, போன்ற சத்துக்கள் அதிக அளவு உள்ளன. கீரை சாகுபடியில் பூச்சி தாக்குதல் அதிகம் காணப்படுகிறது. இலை பிணைக்கும் புழுக்கள் இலைகளை இணைத்து அதன் உள்ளே இருந்து பச்சையத்தை உண்ணுகின்றன. அதன் தாக்குதல் அதிகமாக இருக்கும் போது இலைகள் பச்சையமில்லாமல் வெண்மையாக காய்ந்து விடுகின்றன. அதனால் கீரையின் விற்பனைத்திறன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

கீரை கூன்வண்டு புழுக்கள் தண்டுப்பாகத்தை குடைந்து சென்று உண்பதால் தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றியும், தாக்கப்பட்ட தண்டுகள் வளைந்தும் பருமனாகவும் காணப்படம். அதனால், இலைகள் இளம் தளிர்கள் உண்டாவது குறைந்தும் தண்டுகளில் வெடிப்பும் உண்டாகும். பாதிப்பு அதிகமாக இருக்கும் செடிகளின் தண்டுகள் உடைந்துவிடும்.
ஆணை வண்டு தன் முட்டைகளை இலைகளின் அடிப்புறத்தில் இடும். அதன் புழுக்கள் இலைகளை சுரண்டி சாப்பிடுகின்றன. வெட்டுப்புழுக்கள் மாலை மற்றும் இரவு நேரங்களில் இலைகளில் பெரிய துவாரங்கள் ஏற்படுத்தியோ அல்லது இலைகளை முழுவதுமாக கடித்துத்தின்று சேதம் ஏற்படுத்தும். இத்தகைய புழுக்களை கட்டுப்படுத்த கீரையைத் தாக்கும் எல்லா பூச்சிகளும் களைச் செடிகளிலும் மற்றும் சாரணை போன்ற செடிகளிலும் வாழ்கின்றன. எனவே சாகுபடி செய்யும் கீரைகளை தவிர்த்து மற்ற செடிகளை அகற்றிவிட வேண்டும்.

இலைகளில காணப்படும் முட்டைக் குவியல்கள், இளம்புழுக்கள் மற்றும் வளர்ந்த புழுக்களை கையால் எடுத்து அகற்றிவிட வேண்டும். பயிர் செய்யப்படாத இடங்களில் விளக்குப்பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். பயிர் சுழற்சி முறைப்படி சாகுபடி செய்ய

வேண்டும். பூச்சிகளின் சேதம் அதிகமாக காணப்படும் பாத்திகளில் மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.5 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். மருந்து தெளிக்கப்பட்ட கீரையை ஏழு நாட்கள் கழித்து நீரில் நன்றாக கழுவி பயன்படுத்த வேண்டும். அதிக நச்சுத்தன்மை மற்றும் ஊடுருவி பாயக்கூடிய பூச்சி மருந்துகளை பயன்படுத்தக்கூடாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## *நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 5 நாட்களில் 30 காசுகள் சரிவு*

*நாமக்கல், நவ.30–*

*நாமக்கல் மண்டலத்தில் கடந்த 24–ந் தேதி முட்டை விலை 282 காசுகளாக இருந்தது. இந்த நிலையில் கடந்த 26–ந் தேதி நாமக்கல்லில் கூடிய தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு 15 காசுகள் குறைக்க முடிவு செய்தது. இதன்படி முட்டை விலை 267 காசுகளாக குறைந்தது.*

*இதற்கிடையே நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை மேலும் 15 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை விலை 252 காசுகளாக குறைந்து உள்ளது.*

*பிறமண்டலங்களில் முட்டை விலை காசுகளில் வருமாறு:–*

*ஐதராபாத்–257, விஜய வாடா, தனுகு–255, நெல்லூர், சித்தூர்–273, சென்னை–265, மைசூர்–255, பெங்களூர்–260, மும்பை–282, டெல்லி–280, கொல்கத்தா–275.*

*முட்டைக்கோழி கிலோ ரூ.34 ஆகவும், கறிக்கோழி கிலோ ரூ.41 ஆகவும் நீடிக்கிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.*

*சபரிமலை சீசன் தொடங்கி உள்ளதால், தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை நுகர்வு பொதுமக்களிடையே குறைந்து உள்ளது. அத்துடன் பிறமண்டலங்களிலும் முட்டை விலை குறைந்து வருகிறது. எனவே விற்பனையை அதிகரிக்க, முட்டை விலையை குறைத்து உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.*

*கடந்த 5 நாட்களில் முட்டை விலை 30 காசுகள் சரிவடைந்து உள்ளதால், பண்ணையாளர்கள் கலக்கம் அடைந்து உள்ளனர்.*

## *தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரி அளவைவிட அதிகம் இன்னும் 2 நாட்களில் மழை அதிகரிக்க வாய்ப்பு*

*சென்னை, நவ.30–*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரி அளவை தாண்டி பெய்துள்ளது என்று வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ். ஆர்.ரமணன் தெரிவித்தார்.*

*வானிலை நிலவரம் குறித்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–*

*காற்றழுத்த தாழ்வுநிலை மறைந்தது*

*இலங்கை முதல் தென் தமிழகம் வரை வங்கக்கடலில் பரவி இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை மேற்கு நோக்கி மறைந்துவிட்டது.*

*இருப்பினும் இன்று (செவ்வாய்க்கிழமை) தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் மழைபெய்யும். தென் கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இன்னும் 48 மணிநேரம் கழித்து மழை அளவு தமிழ்நாட்டில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.*

*நேற்று காலை 8–30மணி நேர நிலவரப்படி பெய்துள்ள மழை அளவு வருமாறு:–*

*திருவையாறு 18 செ.மீ., திருத்துறைப்பூண்டி 17 செ.மீ., தஞ்சை 15 செ.மீ., நீடாமங்கலம் 14 செ.மீ., பேராவூரணி, முத்துப்பேட்டை தலா 13 செ.மீ., திருக்காட்டுப்பள்ளி 12 செ.மீ., கொடவாசல், மன்னார்குடி, திருச்சி விமானநிலையம், முசிறி, சமயபுரம் தலா 11 செ.மீ., மணியாச்சி, வலங்கைமான், ஆலங்குடி, செங்கோட்டை தலா 10 செ.மீ., பாபநாசம், பட்டுக்கோட்டை, கந்தர்வகோட்டை, லால்குடி, திருவிடை மருதூர், ஓட்டப்பிடாரம், திருச்சி, ஜெயங்கொண்டம் தலா 9 செ.மீ., தூத்துக்குடி, அரியலூர், பாடலூர் 8 செ.மீ., நன்னிலம், திருவாரூர், மயிலாடுதுறை, திருமயம், விராலிமலை, புதுக்கோட்டை தலா 7 செ.மீ. மழை பெய்துள்ளது.*

*வடகிழக்கு பருவ மழை காலத்தில் தமிழ்நாட்டில் சராசரியாக 43.3 செ.மீ.மழைபெய்யவேண்டும். ஆனால் இப்போதே 45 செ.மீ.பெய்துள்ளது. அதாவது இயல்பான (சராசரி) மழையை தாண்டிவிட்டது. சென்னை, திருவள்ளூர், காரைக்கால் ஆகிய மாவட்டங்களில் இயல்பான அளவுக்கு மழை பெய்யவில்லை. சில மாவட்டங்களில் இயல்பான அளவை விட அதிகமாக பெய்துள்ளது. சில மாவட்டங்களில் இயல்பான அளவுக்கு பெய்துள்ளது.*

*தென்மேற்கு பருவமழையில் இந்த வருடம் சராசரி மழையைவிட 20 சதவீத மழை அதிகம் பெய்துள்ளது.*

இன்னும் மழையை எதிர்பார்க்கலாம்

வடகிழக்கு பருவமழை காலம் டிசம்பர் இறுதி வரை உள்ளது. எனவே இன்னும் ஒரு மாதம் முழுமையாக உள்ளது. இதனால் இன்னும் தமிழ்நாட்டில் மழையை எதிர்பார்க்கலாம். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

## நடப்பு ரபி பருவத்தில் கோதுமை சாகுபடி பரப்பளவு 16% சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர் – மார்ச்), அதாவது நவம்பர் 26–ந் தேதி வரையிலுமாக, நாட்டில் கோதுமை சாகுபடி செய்யும் பரப்பளவு 123.89 லட்சம் ஹெக்டேராக குறைந்துள்ளது. இது, சென்ற ஆண்டு ரபி பருவத்தில் 148.20 லட்சம் ஹெக்டேராக இருந்தது. ஆக, கோதுமை சாகுபடி செய்யும் பரப்பளவு 16 சதவீதம் சரிவடைந்துள்ளது.

இதேபோன்று, நடப்பு ரபி பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவும் 12 சதவீதம் சரிவடைந்துள்ளது. மேலும், சோளம், கம்பு, மக்காச்சோளம் மற்றும் குறிப்பிட்ட சில பருப்பு வகைகள் போன்றவற்றின் சாகுபடி பரப்பளவும் குறைந்து போயுள்ளதாக மத்திய அரசின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடப்பு காலண்டர் ஆண்டில் இந்தியாவில் காபி பயன்பாடு ஒரு லட்சம் டன்னை தாண்டும்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு 2010 காலண்டர் ஆண்டில் இந்தியாவில் காபி பயன்பாடு ஒரு லட்சம் டன்னை தாண்டும் என காபி வாரியம் தெரிவித்துள்ளது. இது, கடந்த 2008–ஆம் ஆண்டில் 94,400 டன்னாகவும், 2009–ஆம் ஆண்டில் 97,000 டன்னாகவும் இருந்தது. நம் நாட்டில் காபி பயன்பாடு ஆண்டுக்கு 5–6 சதவீதம் என்ற அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது.*

*நகர்ப்புறங்களில்...*

*இந்தியாவில் காபி–கஃபே கலாச்சாரம் பெருகி வருகிறது. நகர்ப்புறங்களில் காபி பயன்பாடு அதிகரித்து வருவதற்கு இதுவே காரணமாகும். இதுவரை பயன்பாடு குறைவாக இருந்த வட மாநிலங்களிலும், இதன் உபயோகம் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*“காபி பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில் இந்திய காபி வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இத்துறையைச் சேர்ந்த நிறுவனங்களும் காபி கஃபேக்கள் மற்றும் காபி வழங்கும் இயந்திரங்கள் வாயிலாக காபி பான விற்பனையை மேம்படுத்தி வருகின்றன” என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது.*

*இந்தியா முதலிடம்*

*கடந்த 2008–ஆம் ஆண்டில், இந்தியாவில் 94,400 டன் காபி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதில் நகரங்களின் பங்களிப்பு 73 சதவீதமாகவும், கிராமங்களின் பங்களிப்பு 27 சதவீதமாகவும் இருந்தது. இந்த கிராமங்கள் பெரும்பாலும் தென்னிந்தியாவைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.*

*ஆசியா கண்டத்தில், காபி ஏற்றுமதியில் இந்தியாதான் முதலிடத்தில் உள்ளது. நாட்டில் உற்பத்தியாகும் காபியில் 70 சதவீதம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. நடப்பு காபி பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) உள்நாட்டில் 3.08 லட்சம் காபி உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கடந்த செப்டம்பருடன் நிறைவடைந்த பருவத்தில் 2.89 லட்சம் டன்னாக இருந்தது.*

*இந்தியாவில் காபி உற்பத்தியில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. நாட்டின் மொத்த காபி உற்பத்தியில் இம்மாநிலத்தின் பங்களிப்பு சுமார் 70 சதவீதமாகும். இங்கு குடகு, சிக்மகளூர் மற்றும் ஹசன் ஆகிய பகுதிகள் அதிகளவில் காபி உற்பத்தி செய்து*

வருகின்றன. இந்திய காபி உற்பத்தி துறை சுமார் 6 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது. சர்வதேச அளவில் காபி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இந்தியாவின் பங்களிப்பு 3.5 சதவீத அளவிற்கே உள்ளது.

உலக காபி உற்பத்தி

2010–ஆம் ஆண்டில், உலக அளவில் காபி பயன்பாடு 2 சதவீதம் அதிகரிக்கும் என சர்வதேச காபி அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. சென்ற ஆண்டில் உலகம் முழுவதுமாக 13.20 கோடி மூட்டை காபி பயன்படுத்தப்பட்டுள்ளது. இது, நடப்பாண்டில் 13.40 கோடி மூட்டைகளாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், உலக அளவில் காபி உற்பத்தி 13.30 கோடியிலிருந்து 13.50 கோடி மூட்டைகளாக உயரும் என்றும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## கொலக்கம்பை பகுதிகளில் பலத்த மழையினால் காய்கறி உற்பத்தி பாதிப்பு

கொலக்கம்பை, நவ.30–

கொலக்கம்பை பகுதியில் பெய்து வரும் தொடர் மழையினால் காய்கறி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி களான தூதூர்மட்டம், கரும் பாலம், அதிகரட்டி, சேலாஸ், மஞ்சக்கொம்பை, ஆர்செடின், உலிக்கல், காட்டேரி, கோடேரி, குன்னக்கொம்பை, கைக்காட்டி போன்ற பகுதி களில் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் இந்த பகுதியில் குடிநீர் ஆதாரங்களாக விளங் கும் துண்டநரி அணையில் போதுமான அளவு நீர் நிரம்பி உள்ளது. மேலும் தூதூர்மட் டம், சட்டன், டெராமியா பகுதிகளில் ஓடும் நீரோடை களில் வெள்ளம் அதிகரித்து சிறிய பாலங்களின் மீது 3 அடிக்கு மேல் வெள்ளநீர் கரை புரண்டு ஓடுகிறது.

அழுகியது

தொடர் மழையினால் விவசாய நிலங்களில் வெள்ள நீர் புகுந்து குளம் போல் தேங்கி கிடக்கிறது. இதனால் மலை தோட்ட காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு, கோஸ், பீன்ஸ், கேரட் போன்ற காய்கறி கள் அழுக தொடங்கி உள்ளது. மழையினால் காய்கறி உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது.

மேலும் கொலக்கம்பை மற்றும் சுற்று வட்டார பகுதி களில் பசுமை குடில் அமைத்து

கொய்மலர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் கொய்மலர்கள் பெங்களூர், கேரளா மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் தங்கள் குடும்பங்களை விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

காற்று

தற்போது இந்த பகுதியில் காற்றுடன் பலத்த மழை பெய்வதால் குடில்களின் மேற்கூரைகளாக அமைக்கப் பட்டள்ள பிளாஸ்டிக் கிழிந்து மழைநீர் குடில்களில் புகுந்து விடுகிறது. மழைநீர் குடில்களில் தேங்கி உள்ளதால் பூச்செடிகள் அழுக தொடங்கி உள்ளன. மேலும் கொய்மலர் உற்பத்தி மழையால் குறைந்து காணப்படுகிறது. இதனால் கொய்மலர் விவ சாயிகளுக்கு பல ஆயிரம் மதிப்பில் இழப்பு ஏற்பட்டு உள்ளது. மழையால் கொய் மலர்களை நம்பி உள்ள கொய் மலர் விவசாயிகள் பெரும் பாதிப் படைந்து உள்ளனர்.

கொப்புள நோய்

தொடர் மழையினாலும், மேக மூட்டத்தினாலும் கொலக்கம்பை பகுதிகளில உள்ள தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்கி வருகிறது. இதனால் தேயிலை விவசாயமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழையினால் கொலக்கம்பை பகுதியில் உற்பத்தி செய்யப் படும் மலைகாய்கறிகள் பெரு மளவு குறைந்து விட்டது. இனி அரசு மானியத்துடன் கடனு தவி அளித்தால் மட்டுமே காய்கறி விவசாயத் தில் ஈடுபட முடியும் என இந்த பகுதி விவாயிகள் தெரிவித்து உள்ளனர்.

கெரடாலீஸ், கரும்பாலம், மேல் பாரதிநகர், கீழ் பாரதி நகர், எம்.ஜி.ஆர். நகர் போன்ற பகுதிகளில் உள்ள குடியிருப்பு கள் அடுக்கு முறையில் செங்குத்தான பகுதிகளில் அமைந்து இருப்பதால் மழை காரணமாக ஆங்காங்கே கழிவுநீர் குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளது.

மேலும் போதிய தடுப்பு சுவர்கள் இல்லாததால் மண் அரிப்பு ஏற்பட்டும் வீடுகளின் சுவர்கள் இடிந்து உள்ளது. வீடுகள் பழுதடைந்தவர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளனர். பலத்த மழையினால் இந்த பகுதி பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டு உள்ளது.